# தமிழ்நாடு சட்டமன்றம்:

# நேற்று - இன்று - நாளை!

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1833 - ஆம் ஆண்டு சட்டமன்ற முறை தொடங்கப்பட்டது. முதன் முதலில் கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறும் ஓர் அவையாகத்தான் இம்முறை உருவாயிற்று. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட 1861, 1892, 1919 - ஆம் ஆண்டுகளின் அரசியல் சீர்திருத்தச் சட்டங்களின்படிதான் இந்தியாவில் சட்டமன்ற முறை வளர்த்தெடுக்கப்பட்டு வந்து, இன்றைய நிலையை அடைந்துள்ளது.

இந்தியாவிலுள்ள மற்ற சட்டமன்றங்களை விட தமிழகச் சட்டமன்றத்துக்குப் பழம்பெரும் வரலாற்றுப் பெருமை உண்டு. இன்றைக்குத் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய நடப்பு நிலையை ஆய்வு செய்தால் மிகவும் கவலையளிக்கக் கூடியதாய் இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தவரை தமிழகச் சட்டமன்றத்தில் சூடான விவாதங்கள், எதிர்தரப்பு விவாதங்கள் என எது நடந்தாலும் அவையின் கண்ணியம் காக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் அவர் மறைவிற்குப் பிறகு சட்டப்பேரவைகளில் நடந்தவைகளை ஏடுகள் வெளியிட்டபோது மக்கள் முகம் சுளிக்கவே செய்தனர்.

(1) எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டதற்குப் பிறகு எதிர்க்கட்சிகளுடைய வாதங்களை அவையில் எடுத்துச் சொல்ல சரியான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

(2) தமிழகச் சட்டமன்றத்தில் ஒரே நேரத்தில் இரு பேரவைத் தலைவர்கள் செயல்பட்ட செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

(3) எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் க.சுப்பு, துரைமுருகன், இரகுமான்கான் போன்றவர்களின் கருத்துகளை அவையில் கூற முடியாமல் வெளியேற்றப்பட்டனர்.

(4) ஆனந்த விகடன் ஆசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு சட்டமன்றம் தண்டனை வழங்கி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

(5) திருமதி ஜானகி எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது நம்பிக்கை வாக்கு கோரினார். அதனால் சட்டமன்ற வளாகத்தில் பிரச்னைகளை உருவாகி சட்டமன்றத்தில் காவல் துறையினர் புகுந்து அடிதடி நடத்தினர்.

(6) ஜெயலலிதா முதல்வராக இருக்கிற இன்றைய சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தமது கருத்துகளைக் கூற முடியாத நிலை பல சமயங்களில் நடந்திருக்கிறது. இது ஒரு கட்சி ஆட்சியின் நிலைபாட்டையே வற்புறுத்துவதுபோல தோன்றுகிறது.

இப்படி இன்னும் பல நிகழ்ச்சிகளைச் செய்தித்தாள்கள் பட்டியலிட்டுக் காட்டியுள்ளன. இதனைத் தொடர்ந்துதான் இங்கே சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைய ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி சட்டமன்றப் பேரவையில் 13.3.1995 அன்று உரையாற்றினார். அந்த உரையில் ஜெயலலிதா தலைமையிலுள்ள தமிழக அரசு மக்கள் நல அரசாக இருக்கின்றது என்று பாராட்டிக் குறிப்பிட்டார். இருப்பினும், இதே ஆளுநர் கடந்த காலங்களில் டெல்லியிலும், சென்னையிலும் இந்த அரசைப் பற்றி பத்திரிகையாளர் மத்தியில் கடுமையாக விமர்சித்ததும் உண்டு. ஒரு பக்கத்தில் இந்த அரசைப் புகழ்வதும், விமர்சிப்பதும் என்ற நிலை மரபு வழியாக செய்கின்ற கடமை என்றாலும், ஆளுநர் முதல்வர் உறவு சரியாக இல்லாத நிலையில் இவ்விமர்சனங்கள் மக்கள் மத்தியில் நிகழ்ந்தன.

நிதிநிலை அறிக்கையில் மக்களுக்குச் சென்றடையும் நலத் திட்டங்களையும், அரசின் நிதிநிலை ஆதாரங்களையும் விவாதிக்காமல் வெறும் முதல்வரை புகழக் கூடிய பூஜிக்கக் கூடிய அளவில் இன்றைய சட்டமன்ற நடவடிக்கைகள் இருக்கின்றன. நாடாளுமன்ற முறையில் ஆளும் கட்சியினரையும், அமைச்சர் பொறுப்பில் இருப்பவர்களையும் நல்ல செயலுக்குப் பாராட்டுவது ஒரு மரபுதான். அந்த மரபுக்கும் ஓர் எல்லை உண்டு. அதை மீறுகின்ற அளவில்தான் இன்று சட்டமன்றத்தின் செயல்பாடுகள் இருக்கின்றன. சட்ட மன்றம் என்பது தனிப்பட்டவரின் பிரசாரத்திற்குப் பயன்படும் வகையில் இல்லை. அதேபோன்று நிழல் அமைச்சரவை (Shadow Cabinet) என்று சொல்லக் கூடிய எதிர்க்கட்சியிருக்கும் உரிய வாய்ப்பையும், உரிய அங்கீகாரத்தையும் தகுதியையும் தரவேண்டும் என நாடாளுமன்ற மரபுக்குச் செயல் வடிவம் அளித்த நாடாளுமன்ற முறையை நன்கறிந்த அறிஞர் மே கூறுகின்றார்.

அண்மைக் காலங்களில் நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும் முக்கிய மக்கள் பிரச்னைகளை விவாதிப்பதற்கு அதிகமான நேரம் எடுத்துக் கொள்ளுவதில்லை. வெறும் அவசியமற்ற தனிப்பட்ட வாக்குவாதங்கள், விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நாடாளுமன்ற மரபுகளுக்கு அப்பாற்பட்டு நாகரிகமற்ற முறையில் நடக்கின்றன என்பதை ஏடுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

நம் நாடாளுமன்ற முறை அடிப்படையில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறையை ஒத்து செயல்பட்டு வருகிறது. பிரிட்டனில் ஆளும் கட்சி எந்த சமயத்திலும் தனிச் சலுகைகள் பெற்றதில்லை. தங்களுக்குச் சாதகமாக நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தியதில்லை. எதிர்க்கட்சியினருடைய ஜனநாயகப் பணிகளைத் தடுக்கக் கூடிய வகையில் அங்கு ஆளும் கட்சியினர் நடந்து கொள்வதில்லை. நாடாளுமன்ற மரபுகளைத் தூக்கி எறியும் வகையில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் உரிமைகளை ஒடுக்குவதும், அதேபோன்று எதிர்க்கட்சியினருக்கு வேண்டிய வாய்ப்புத் தராமல் மறுப்பதுமான செய்திகளும் வருகின்றன. மக்களின் வரிப்பணத்தைக் கொட்டி சட்டமன்றம் நடைபெறுகிறது.

புகழ்மிக்க தமிழகச் சட்டமன்றம் 1952 - இல் இருந்து கிட்டத்தட்ட 43 ஆண்டுகளாக தன்னுடைய பணியை ஆற்றி வருகின்றது. இந்தச் சட்டமன்றம் 1952 - இலிருந்து 57 வரை சென்னை கலைவாணர் அரங்கிலிருந்தும் (பாலர் அரங்கம்) பின்னர் இன்றைக்குள்ள

செயிண்ட் ஜார்ஜ் வளாகத்திலிருந்தும் மறுபடி 1957 - இலிருந்து இயங்கி வருகின்றது. இன்றைய சட்டமன்ற கட்டடத்தை கானட் பிரபு 10.1.1921 - இல் திறந்தார். தமிழகச் சட்டமன்றம் நடைபெறுகின்றபோது ஒரு நிமிடத்திற்குச் சுமார் ரூ.3,000 செலவாகும். இந்திய நாடாளுமன்றத்தில் மக்களவை, மாநிலங்கள் அவை நடைபெற்றால் ஒரு நிமிடத்திற்கு ரூ.5,000 செலவாகின்றது. இப்போதெல்லாம் தமிழகச் சட்டமன்றம் நடைபெறுகின்ற நாட்கள் குறைந்து கொண்டே வருகின்றது. கிடைத்த தகவல்களின்படி தமிழகச் சட்டமன்றம் சுமார் 60 நாட்கள்தான் நடைபெறுகின்றது. இந்த 60 நாட்களே நடைபெறும் தமிழகச் சட்டமன்றத்தில் தினமும் சண்டைகளும், சச்சரவுகளும் தான் என்று ஏடுகளில் வருகின்றன. அதே நேரத்தில் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு வருடத்திற்கு 60,000- ரூபாயிலிருந்து ரூ.80,000 வரை அரசு செலவு செய்து வருகின்றது. அதை எல்லாம் சிந்திக்காமல் மக்களுடைய பிரச்னைகளையும் எடுத்துரைக்காமல் ஏதோ பொழுதுபோக்குக்காக நாடாளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோ போய் வருவது மக்களின் வரிப்பணத்தை வீணாக்கும் செயலாகும்.

1994 - 95 நிதி நிலை அறிக்கையின்படி நாடாளுமன்ற இரு அவைகளுக்கும் செலவுத் தொகை ரூபாய் 74 கோடி! இதில் மக்களவைக்கு 49 கோடி! ஒரு நாளைக்கு நாடாளுமன்றத்திற்கு செலவு ரூ.49 இலட்சம்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் பிரச்னைகளை உரிய வகையில் எதிரொலிக்க வேண்டும். அதேபோன்று நாடாளுமன்ற முறையில் தவறுகளைப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டினால் அதை தண்டனைக்குரிய செயலாக கருதக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நாடாளுமன்றம், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தனி உரிமைகள் (Privilege) என்ன என்பதை முறைப்படுத்தி சட்டமாக (Code) கொண்டு வரப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையில் கடந்த காலத்தில் Search Light வழக்கு முதல் இல்லஸ்ட்ரேட் வீக்லி செய்தியாளர் சுனில் வழக்கு வரை தீர்வு கிட்டவில்லை. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் என்ன என்பதை தெளிவாக்கினால் மக்கள் அவர்களுடைய பிரதிநிதிகளின் பணிகளை அறிய வாய்ப்பாக இருக்கும்.

சட்டமன்ற பேரவைத் தலைவர் ஆளும் கட்சியின் பிரதிநிதியாக இல்லாமலும், பேரவைத் தலைவர் பதவிக்கு ஒரு மரியாதையையும் தகுதியையும் பெற்றுத் தரக் கூடிய நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பேரவைத் தலைவர் முதல்வர் தயவில் பதவி பெற்றோம் என்று எக்காலத்திலும் முதல்வர் காலில் விழுபவராகவோ அல்லது ஆளும் கட்சிக்குத் தலையாட்டி பொம்மையாகவோ இருப்பது நாடாளுமன்ற முறைக்கு இழுக்குத் தேடி தருவதாகும்.

நாடாளுமன்றமும், சட்டமன்றமும், நீதித் துறையின் கட்டுப்பாட்டில் வருகிறதா இல்லையா என்ற சர்ச்சை இருந்து கொண்டு வருகிறது. அதை உடனே தீர்க்க வேண்டியது மாபெரும் கடமையாகும். பேரவைத் தலைவர் என்பவர் சட்டாம்பிள்ளையாகவோ அல்லது ஆளும் கட்சியின் ஊதுகுழலாகவோ இல்லாமல், துலாக்கோல் நிலையிலிருந்து அவையை நடத்த வேண்டும். பேரவைத் தலைவர் ஆளும் கட்சியினருக்கு ஆதரவாக இல்லாமல் எதிர்க்கட்சியினருக்கு ஒரு பாதுகாவலனாக அவையில் திகழ வேண்டும்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வந்த நாட்களையும் அவர்கள் அவையில் ஏற்ற பங்கினையும் பகிரங்கமாக மக்களுக்குத் தெரியக் கூடிய விதத்தில் ஒரு முறையைக் கொண்டு வருதல் வேண்டும். அதேபோல் சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்குத் தேவையான தகவல்கள், குறிப்புகள் உடனுக்குடன் வழங்கக் கூடிய அளவில் கட்டுப்பாட்டு அறைகள் சட்டமன்ற வளாகத்தில் 24 மணி நேரமும் செயல்படக் கூடிய அளவில் அமைக்க வேண்டும். இதனால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரை உடன் தொடர்பு கொள்ளவே அல்லது தொகுதி பிரச்சனைகளை உடனுக்குடன் அரசுக்குத் தெரியப்படுத்தவோ இயலும்.

சட்டமன்றத்தில் முதல்வரை இறைவடிவமாக தகுதியற்ற முறையில் புகழும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையை ஒரு வரம்பிற்குள் கொண்டு வரப்பட வேண்டும். பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறையில் மாண்புமிகு பிரதமர் என்று விளிப்பார்கள். ஆனால் இன்றைக்குப் புதியதாக பட்டங்களை சேர்த்து அழைக்கும் வகையில், நிதிநிலை அறிக்கையிலும் ஆளுநர் உரையிலும் சேர்ப்பது நாடாளுமன்ற முறைக்கு உகந்ததல்ல. இது ஓர் ஆரோக்கிய செயலுக்கு வழிவகை செய்யாமல் ஜனநாயகத்திற்கு மாறாக Hero worship என்று சொல்லக்கூடிய தனி மனிதனுடைய அதிகாரத்தை வளர்க்கும் நிலைக்குத் தள்ளப்படும். சட்டமன்றத்தில் மக்களுடைய பிரச்னைகளை விட்டு தனி நபருடைய புகழையும், செல்வாக்கையும் விவாதிப்பது ஏடுகள் வாயிலாக நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, நாடாளுமன்ற சட்டமன்ற செயல்பாடுகளுக்குப் புதிய நெறிமுறைகளை வகுக்க வேண்டும். மரபுகளைப் பின்பற்ற வேண்டும்.

மக்களைக் காக்கக்கூடிய முக்கோணத்தில் சட்டமன்றம், நீதித்துறை, ஏடுகள் என்ற அடிப்படையில் சட்டமன்றம் மக்கள் சந்திக்கின்ற பிரச்னைகளைத் தீர்க்கின்ற ஒரு ஜனநாயக காவலானக இருக்க வேண்டும். சமீபத்தில் ராஜீவ் காந்தி கொலையின் பயனால் மிருக பலத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கும் அ.தி.மு.க. அரசு எதிர்க்கட்சியினரை தாக்குவதும், ஒடுக்குவதும் கண்டனத்துக்குரியது. நாடாளுமன்ற முறை இன்றைக்கு ஒரு நல்ல முறையாக இருந்தாலும் அதனுடைய செயல்பாடு பல தவறுகள் நடக்கக் கூடிய அளவில் உள்ளது. எனவே, ஜனநாயக ஆர்வலர்கள் அனைவரும் இந்திய நாடாளுமன்ற முறையைச் செழுமையாக்கக் குரல் கொடுக்க வேண்டும்.

**சங்கொலி** 02.02.1996